நவ.25, 26–இல் கோவை, ஈரோட்டுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பயணம்

சென்னை, நவ. 22: முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை, ஈரோடு மாவட்டங்களுக்கு நவ.25, 26 ஆகிய 2 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். கோவையில் செம்மொழிப் பூங்கா, ஈரோடு மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லான் சிலை மற்றும் முடிவுற்றத் திட்டப் பணிகளை அவர் திறந்து வைக்கிறார்.

இதுகுறித்து தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோவையில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் 45 ஏக்கரில் ரூ.208.50 கோடியில் அமைக்கப்பட்டுள்ள கோவை செம்மொழிப் பூங்காவை மக்கள் பயன்பாட்டுக்காக நவ.25-ஆம் தேதி காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். பின்னர் மாலையில், தொழில் துறை சார்பில் நடைபெறவுள்ள 'டிஎன் ரைஸ்' நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார். அப்போது, முதல்வர் முன்னிலையில் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தொடர்ந்து, நவ.26-ஆம் தேதி காலை 10 மணிக்கு ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில் ரூ.4.90 கோடியில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லானின் முழு உருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். பின்னர், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அவரது சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

இதைத் தொடர்ந்து, ஈரோடு சோலார் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும் அரசு விழாவில் ரூ.605 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். 1.84 லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். பின்னர் சித்தோடு ஆவின் பால் பண்ணை வளாகத்தில் ரூ.50 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள பால்வளத் தந்தை என அழைக்கப்படும் சி.கு.பரமசிவனின் உருவச் சிலையைத் திறந்து வைக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரூப்–2, 2–ஏ தேர்வு எழுதிய தேர்வர்கள் கவனத்துக்கு...

சென்னை, நவ. 22: குரூப்–2, 2–ஏ பதவிகளுக்கான முதல்நிலைத் தேர்வு எழுதிய தேர்வர்கள், குறிப்பிட்ட பத்தியில் ஆம், இல்லை என்பதை செவ்வாய்க்கிழமை (நவ.25) இரவுக்குள் தேர்வு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளில் அடங்கிய குரூப்–2, குரூப்–2ஏ பதவிகளுக்கான முதல்நிலைத் தேர்வு ஒளிக்குறி உணரி வகையில் கடந்த செப்.28-ஆம் தேதி நடத்தப்பட்டது.

இந்தத் தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களில் கால்நடை ஆய்வாளர் பணி தொடர்பாக மேல்நிலைக் கல்வி நிலையில் தேர்வு எழுதியவர்கள், உயிரியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் படித்திருக்கிறீர்களா? என்ற பத்தியில் உள்ள ஆம் / இல்லை என்பதை தவறாமல் தேர்வு செய்ய வேண்டும்.

இதுதொடர்பாக தேர்வாணையத்தின் http://www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் OTR நவ.22 முதல் 25-ஆம் தேதி இரவு 11.59 மணி வரை 4 நாள்களுக்கு திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திமுக கிளைச் செயலர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை

வாழப்பாடி, நவ. 22: சேலம் மாவட்டம், கல்வராயன் மலை கருமந்துறை அருகே முன்விரோதம் காரணமாக திமுக கிளைச் செயலர் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கல்வராயன் மலை கருமந்துறை அருகே யுள்ள கிராங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் (46) (படம்). இவர் இப்பகுதி திமுக கிளைச் செயலராக இருந்து வந்தார். இவருக்கு மனைவி சரிதா (40), கோகிலா, பரிமளா ஆகிய இரு மகள்களும், நவீன் என்ற மகனும் உள்ளனர். சரிதா சத்துணவு அமைப்பாளராகப் பணிபுரிகிறார். ராஜேந்திரனுக்கும், பக்கத்துத் தோட்டத்தைச் சேர்ந்த இவரது உறவினர்களான ராஜமாணிக்கம், பழனிசாமி ஆகியோருக்கும் இடையே நிலத் தகராறு காரணமாக முன்விரோதம் இருந்து வந்தது.

வெள்ளிக்கிழமை இரவு ராஜேந்திரன், மனைவி சரிதாவுடன் பைக்கில் வீட்டுக்குச் சென்றபோது, வனப்பகுதியில் மறைந்திருந்த மர்ம நபர்கள் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் உடலில் பல இடங்களில் குண்டுபாய்ந்து ராஜேந்திரன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்த கல்வராயன் மலை கரியக்கோயில் மற்றும் கருமந்துறை போலீஸார் சடலத்தைக் கைப்பற்றி சேலம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக, இருவரைப் பிடித்து வாழப்பாடி டி.எஸ்.பி. சுரேஷ்குமார், கருமந்துறை காவல் ஆய்வாளர் கமலக்கண்ணன் தலைமையிலான போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருள்கள் விற்பனை உயர்வு

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

மதுரை, நவ. 22: முதல்வர் மு.க.ஸ்டாலின் அளிக்கும் ஊக்கம் காரணமாக, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்கள் விற்பனை ரூ. 620 கோடியாக உயர்ந்துள்ளதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் மகளிர் திட்டம் சார்பில், ஊரக கைவினைஞர்கள் உற்பத்திப் பொருள்கள் விற்பனைக் கண்காட்சி (சரஸ்), உணவுத் திருவிழாவை சனிக்கிழமை தொடங்கிவைத்த அவர் மேலும் பேசியதாவது:

கடந்த ஆண்டு சென்னையில் ஊரக கைவினைஞர்கள் உற்பத்திப் பொருள்கள் விற்பனைக் கண்காட்சி (சரஸ்), உணவுத் திருவிழா 5 நாள்கள் நடத்தப்பட்டது. இதில் ரூ.1.55 கோடிக்கும் அதிகமான பொருள்கள் விற்பனையாகின. தற்போது, மதுரையில் 12 நாள்கள் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இதில் கடந்த ஆண்டை விட அதிகளவில் பொருள்கள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பில் உருவாகும் பொருள்களைக் கொள்முதல் செய்வது, அவர்களின் தன்னம்பிக்கைக்கு அளிக்கும் ஊக்கமாகும்.

முந்தைய 10 ஆண்டுகால ஆட்சியில் இந்தக் குழுக்களின் உற்பத்திப் பொருள்கள் விற்பனை ஆண்டுக்கு ரூ. 10 கோடி என்ற அளவிலேயே இருந்தது. கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்து வரும் ஊக்கம் காரணமாக, நிகழாண்டில் மட்டும் ரூ. 620 கோடிக்கு சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்கள் விற்பனையாக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறார். தொழில் வாய்ப்புகளைத் தேடி வந்த பெண்கள், அரசின் ஊக்கத்தால் தற்போது தொழில்முனைவோராக உயர்ந்துள்ளனர். பெண்களின் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் முயற்சிகளுக்கு பெண்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார் அவர்.

இதையடுத்து, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் பணியை அவர் தொடங்கிவைத்தார்.

இந்த விழாவில் வணிக வரி, பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல், எண்ம சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநர் ஷஜீவனா, மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கோ. தளபதி, மு. பூமிநாதன், ஆ. வெங்கடேசன், துணை மேயர் தி. நாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உணவுத் திருவிழா தொடக்க நிகழ்ச்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன் (இடமிருந்து) மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார், அமைச்சர்கள் பி. மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் ககன்தீப் சிங் பேடி.

பிரம்மாண்ட கண்காட்சி....

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்கள், ஆந்திரம், கேரளம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் கைவினைப் பொருள்கள் 150-க்கும் அதிகமான அரங்குகளில் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. உணவுத் திருவிழாவில் 30-க்கும் அதிகமான அரங்குகளில் மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

டிஎன்பிஎஸ்சி தேர்வு விடைத் தாள்கள்: பதிவிறக்கம் செய்ய ஏற்பாடு

சென்னை, நவ. 22: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் நடத்தப்பட்ட தேர்வுகளுக்கான விடைத் தாள்களை, தேர்வர்கள் பதிவிறக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் அண்மையில் நடத்தப்பட்ட தேர்வுகளுக்கான ஓ.எம்.ஆர்., மற்றும் சி.பி.டி., விடைத் தாள்கள் தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்தவிடைத் தாள்கள் தேவைப்படும் தேர்வர்கள் ஒருமுறை பதிவு எண் வாயிலாக உரிய கட்டணம் செலுத்தி, பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணியில் அடங்கிய வனத்தொழில் பழகுநர் (தொகுதி-6) பதவிக்கான தேர்வின் ஓ.எம்.ஆர்., விடைத் தாள்களை 2026 நவ. 17 வரை, சி.பி.டி., விடைத் தாள்களை வரும் டிச. 17 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணிகளில் அடங்கிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள சாலை ஆய்வாளர் பதவிக்கான தேர்வின் விடைத் தாள்களை 2026 நவ. 18 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-1 (தொகுதி-1 பணிகள்) பதவிக்கான தேர்வுக்குரிய விடைத் தாள்களை 2026 நவ. 18 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-2, 2ஏ (நேர்முகத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) பதவிகளுக்குரிய முதல்நிலைத் தேர்வின் விடைத் தாள்களை 2026 நவ. 19 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

முறைகேடாக சிஎஸ்ஆர் பதிவு: பெண் காவல் ஆய்வாளர் பணியிடை நீக்கம்

நெய்வேலி, நவ. 22: நில ஆவணங்கள் காணாமல் போனதாக புவனகிரி காவல் நிலையத்தில் முறைகேடாக சிஎஸ்ஆர் பதிவு செய்து தடையின்மை சான்றிதழ் வழங்கியதாக பெண் காவல் ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

கடலூர் மாவட்டம், புவனகிரி காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணியாற்றி வந்தவர் லட்சுமி. இவர், சென்னை, திருப்பூர், கடலூர் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் பத்திரங்கள், நில ஆவணங்கள் தொலைந்துவிட்டால், அவை புவனகிரி காவல் சரகப் பகுதியில் காணாமல் போனதாக முறைகேடாக சமூக சேவை பதிவேட்டில் (சிஎஸ்ஆர்) பதிவு செய்து, தடையின்மை சான்றிதழ் வழங்கி வந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்த தகவலை கடலூர் எஸ்.பி. எஸ்.ஜெயக்குமார், விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. உமாவுக்கு தெரிவித்தார். இதையடுத்து, புவனகிரி காவல் ஆய்வாளர் லட்சுமி கடலூர் ஆயுதப் படைக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இருப்பினும், லட்சுமி மீதான குற்றச்சாட்டுகள் குறித்து எஸ்.பி. ஜெயக்குமார் ரகசிய விசாரணை மேற்கொண்டார். இதில், அவர் மீதான குற்றச்சாட்டுகள் உண்மை எனத் தெரிய வந்தது.

இதையடுத்து, எஸ்.பி. ஜெயக்குமார் பரிந்துரையின்பேரில், விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. உமா, பெண் காவல் ஆய்வாளர் லட்சுமியை வெள்ளிக்கிழமை இரவு பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

தங்கம் பவுனுக்கு ரூ.1,360 உயர்வு

சென்னை, நவ. 22: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சனிக்கிழமை பவுனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.93,040-க்கு விற்பனையானது.

சென்னையில் இந்த வாரம் தொடக்கத்தில் நவ.17-ஆம் தேதி பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.92,320-க்கும், நவ.18-இல் 1,120 குறைந்து ரூ.91,200-க்கும் விற்பனையானது. தொடர்ந்து நவ.19-இல் பவுனுக்கு ரூ.1,600 உயர்ந்து ரூ.92,800-க்கு விற்பனையானது. பின்னர், நவ.20-இல் பவுனுக்கு ரூ.800 குறைந்து ரூ.92,000-க்கும், நவ.21-இல் பவுனுக்கு ரூ.320 குறைந்து ரூ.91,680-க்கும் விற்பனையானது. இந்நிலையில், சனிக்கிழமை தங்கம் விலை மீண்டும் உயர்ந்தது. அதன்படி, கிராமுக்கு ரூ.170 உயர்ந்து ரூ.11,630-க்கும், பவுனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.93,040-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை சனிக்கிழமை கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ரூ.172-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.3 உயர்ந்து ரூ.1.72 லட்சத்துக்கும் விற்பனையானது.

டச்சு வங்கி AG

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் அசையாச் சொத்தின் விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் ("மேற்சொன்ன சட்டம்")- இன் கீழ் இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் தமது பல்வேறு வியாபார அலுவலகங்களில் ஒன்றை #. 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரியில் கொண்டுள்ள M/s. டச்சு வங்கி AG ("டச்சு வங்கி AG") இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(2)-இதனுடன் தொடர்புடைய-கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை மீதான உரிமைகள் (அமலாக்கம்) விதிகள்'2002 ("மேற்சொன்ன விதிகள்) இன் விதி 9-இன் கீழ் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தின் படி, **2017 டிசம்பர்,26 ஆம்** நாளிடப்பட்ட கோரிக்கை அறிவிப்பை கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்(கள்) **M/s.JKB ஆட்டோமொபைல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்** ("கடன்தாரர்") **M/s. JK ஆட்டோமொபைல்ஸ் ("கூட்டுக் கடன்தாரர்")** திரு. விஜயசங்கர் ஜெய குமார் ("கூட்டுக் கடன்தாரர்") திருமதி. லதா ஸ்ரீதர் ("கூட்டுக் கடன்தாரர்") மற்றும் திரு. G. பாலாஜி ("கூட்டுக் கடன்தாரர்") ஆகியோருக்கு அனுப்பி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகை **ரூ. 18,89,944.35 (ரூபாய் பதினெட்டு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து நான்கு மற்றும் முப்பத்தைந்து பைசா மட்டும்),** மற்றும் அதற்கான வட்டி சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் திருப்பி செலுத்த கோரினார்.

கடன்தாரர் அத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாருக்கும், மற்றும் பரவலாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்டு, வங்கிக்கு அடமானம் செய்துள்ள சொத்தை மேற்சொன்ன நிலுவைத்தொகையை வசூலிப்பதற்காக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4)-அதற்குத் தொடர்புடைய - மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி கவாதீனம் எடுத்துள்ளார்.

தற்போது, பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ்குறிப்பிடப்பட்ட சொத்து, மூடிய உறையிலிட்ட விலைப்புள்ளிகளை வரவேற்பதன்மூலம், பொது ஏலத்தில் இருக்கின்ற நிலையில் என்ற அடிப்படையில், இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிய செயல்முறைகளின் படியும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும், **2025 டிசம்பர் 31 ஆம் தேதியன்று** காலை 11.00 மணிக்கு டச்சு வங்கி AG, #. 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரியில் விற்பனை செய்யப்படும்.

வ. எண்.	கடனீட்டு சொத்து முகவரி	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை	ஏல நாள்
1.	அட்டவணை A: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்டதாகக் கட்டப்பட்டு "�ஸ்வர்யம்" என்று அறியப்படும் வீடு, நிலம் மற்றும் வளாகம் அமைவிடம்: கதவு எண்.25A, செங்குன்றம் நெடுஞ்சாலை, கொளத்தூர், சென்னை-600 099 பரப்பளவு 32264 சதுர அடி அமையப்பெற்ற சர்வே எண்.67/7 இது பிளாக் எண்.34 இல் உள்ள T.S.எண்.74 உடன் தொடர்புடையது இது வட சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் சார் பதிவு மாவட்டம், சென்னை மாவட்டம், புரசைவாக்கம்-பெரம்பூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில் உள்ளது மற்றும் சென்னை மாநகராட்சியின் வரம்புகளுக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: ஸ்ரீ பெருந்தேவி அவென்யூ 2வது தெரு, தெற்கு: செங்குன்றம் நெடுஞ்சாலை கிழக்கு: T.S.எண் 75 மற்றும் 76 இல் உள்ள சொத்து மற்றும் மேற்கு: T.S.எண் .60,70,71,72 மற்றும் 73 இல் உள்ள சொத்து. அட்டவணை B: 740 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு ஃபிளாட், (கட்டுமானப்பரப்பளவு 638 சதுர அடி, மற்றும் பொதுவான பகுதி 102 சதுர அடி,) ஃபிளாட் எண். CS-4, "ஸ்வர்யம்" என்று அறியப்படும் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் உள்ளது. கதவு எண்.25A, செங்குன்றம் நெடுஞ்சாலை சென்னை 600099 அமையப்பெற்ற சர்வே எண்.67/7. இது பிளாக் எண்.34 இல் உள்ள T.S.எண்.74 உடன் தொடர்புடையது இது வட சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் சார் பதிவு மாவட்டம், சென்னை மாவட்டம், புரசைவாக்கம் - பெரம்பூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில் உள்ளது. இதனுடன் தற்போதைய கட்டுமானங்கள் மற்றும் மேற்கட்டுமானங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து பொதுவான பாத்தியதைகள் மற்றும் உரிமைகள், அட்டவணை "A" குறிப்பிடப்பட்ட நிலத்தில் 462 சதுர அடியுடன் பிரிக்கப்படாத பங்கு உரிமை.	**ரூ. 39,00,000/-**	**ரூ.3,90,000/-**	**31.12.2025**

சொத்து தொடர்பான விபரங்கள் யாவும், வங்கிக்கு தெரிந்த சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் மேற்சொன்ன விபரங்களில் ஏதேனும் பிழையோ, தவறான கூற்றோ அல்லது விடுபடல்களோ இருப்பின் அதற்கு வங்கி பொறுப்பல்ல. ஒப்பந்தப்புள்ளிதார்(கள்)/விலைகோருபவர்/கள் / ஆர்வமுள்ள ஏலதார் / வாங்குநர்/கள் ஆகியோர் தங்களது சுய விருப்பில், சொத்து தொடர்பாக தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, தம்மனவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வங்கியின் சிறந்த அறிவுக்கு எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கங்களும் இல்லை., மேலும் சொத்தை முறையாக சட்டரீதியான செயல்முறைகளை பின்பற்றி விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பொது ஏலத்துக்கான விதிகள் & நிபந்தனைகளாவன:

1. சொத்தை **2025 டிசம்பர் 15 ம் தேதியன்று காலை 11.00 மணி முதல் மாலை 03.00** மணிக்குள் ஆய்வு செய்து கொள்ளலாம். விலைப்புள்ளிகளை, கீழ்க்கையொப்பமிட்ட நபரின் அலுவலகத்துக்கு மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு, "M/s. Deutsche Bank AG EMD" என்ற பெயருக்கு **ரூ. 3,90,000/- (ரூபாய். மூன்று லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்)** என்ற தொகைக்கான கேட்பு வரைவோலை / செலுத்து ஆணை ஆக எடுக்கப்பட்ட டேவணித்தொகையுடன் சேர்த்து, டச்சு வங்கி AG, எண். 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரிக்கு **2025 டிசம்பர் 30 ஆம் தேதியன்று மதியம் 02.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது. விலைப்புள்ளி படிவத்துடன் ஆர்வமுள்ள ஏலதார் தமது அடையாளச் சான்று, குடியிருப்பு சான்று (அஃதாவது கடவுச்சீட்டு, தேர்தல் ஆணைய அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம் போன்றவை) மற்றும் வருமான வரித்துறையால் வழங்கப்பட்ட நிரந்தர கணக்கு அட்டை ஒன்றின் நகலையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

2. விருப்பமுள்ள ஏலதார்கள் தங்களது டேவணித்தொகையை வலைதளம் https://www.bankeauctions.com மூலமாகவும் சமர்ப்பிக்கலாம். (பயனாளி முகவரி & கடவுச்சொல் ஆகியவற்றை வலைதளம் https://www.bankeauctions.com ல் தங்களது பயர்சனல் பதிவு செய்து கொண்டு இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்) டேவணித்தொகையானது NEFT மூலம் கணக்கு எண். 078494027010068, கணக்கு பெயர் - Deutsche Bank AG EMD, பயனர் பெயர் - Deutsche Bank AG, IFSC -DEUT0784PBC க்கு செலுத்தப்பட வேண்டும். ஏலதாரரால் (ஒரு முறை) வலைதளத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, விருப்புள்ள ஏலதார் / வாங்குபவர் பின்வரும் ஆவணங்களின் நகல்களை வலைதளத்தில் **2025 டிசம்பர் 30 ஆம் தேதியன்று** பிற்பகல் 02.00 மணி அல்லது அதற்கு முன்பு (விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்) பதிவேற்றம் செய்ய வேண்டும்., அவையாவன i). NEFT / RTGS சலான் அல்லது கேட்பு வரைவோலை நகல் ii). PAN அட்டை நகல் iii). அடையாள சான்று / முகவரி சான்று (KYC) அஃதாவது வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவற்றின் சுய சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்; இவையன்றி வரப்பெறும் விலைப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். மேலும் முறையாக நிரப்பப்பட்டு, கையொப்பமிடப்பட்ட பிற்சேர்க்கை II & III (இவற்றை வலைதளம் https://www.bankeauctions.com யிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்) ஆகியவற்றின் ஒளி வருடப்பட்ட நகல்களை பதிவேற்றம் செயவதும் அவசியம்.

3. முறையாக நிரப்பப்படாத விலைப்புள்ளிகள் அல்லது டேவணித்தொகையல்லாத விலைப்புள்ளிகள் அல்லது இதில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தேதி மற்றும் நேரத்துக்கு பிறகு பெறப்படும் விலைப்புள்ளிகள் கணக்கிலெடுத்துக்கொள்ளப்படமாட்டா. / மதிப்பற்றதாகவே கருதப்படும்., அதனால் அவை நிராகரிக்கப்படும். டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கொடுக்கப்படமாட்டாது.

4. உள்நுழை முகவரி & கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதிலும் உதவி தேவைப்படுவோர் மற்றும் இணையவழி உள்ளுரு ஏல விலைகோரலில் பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுவோர், M/s. C1 India Pvt Ltd., உத்யோக் விஹார், ஃபேஸ் 2, கல்ஃப் பெட்ரோகெம் பில்டிங், பில்டிங் எண். 301, குர்கான், ஹரியாணா-122015 மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com, உதவிக்கான எண்கள். 124-4302020 / 21 / 22 / 23, 7291981124 / 1125 / 1126, விற்பனைக்கான விசாரணைகளுக்கு sales@bankeauctions.com, 72919 81129 யை தொடர்பு கொள்ளலாம். இணைய நெட்வொர்க் பிரச்சினை ஏதேனும் ஏற்படுமாயின் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலரோ / வங்கியோ அல்லது M/s. C1 India Pvt Ltd நிறுவனமோ பொறுப்பல்ல, மேலும் விருப்புமுள்ள ஏலதார்கள், மின்னணு ஏலத்தில் பங்கேற்க, தாங்கள் தொழில்நுட்ப ரீதியாக நன்கு தயார்நிலையில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

5. இணையவழி உள்ளுரு விலைகோரலில், ஏலதார் தமது விலைத்தொகையை விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை **ரூ. 25,000/- (ரூபாய். இருபத்தைந்தாயிரம் மட்டும்)** அல்லது அதன் மடங்குகளில் அதிகரிக்கலாம்., மேலும் மின்- ஏலம் முடிவறுவதற்கு கடைசி 5 நிமிடத்தில் விலைப்புள்ளி கோரப்பட்டால், முடிவறு நேரம் தன்னியல்பாகவே 5 நிமிடம் (மின் - ஏல செயல்முறை முடிவறும் வரை ஒவ்வொரு முறையும்) அதிகரிக்கப்படும்., அல்லது அது தானாகவே முடிவறும். மின் - ஏல செயல்முறை முடிவில் அதிகபட்ச விலைகோரிய ஏலதாரரை (குறைந்தபட்ச கேட்பு விலைக்கு குறைவிலாத), தேவையான சரிபார்ப்புக்கு பிறகு, அதிகாரப்பூர்வ அலுவலர் / ஈடு பெற்று கடனளித்தவர் வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிப்பார்.

6. வெற்றி பெற்ற ஏலதாரரின் டேவணித்தொகையானது விற்பனை விலைத்தொகையின் ஒரு பாகமாக கருதி வைத்துக்கொள்ளப்படும்., மேலும் வெற்றி பெறாத